பதிவு எண் M. 4729

# தமிழ் ஹரிஜன்

தமிழ்ப்பண்ணை வெளியீடு: ஆசிரியர்கள் பொ. திருகூட சுந்தரம், நாமக்கல் கவிஞர்

மகாத்மா காந்தியடிகளின் வாரப் பத்திரிகை

36 ] சென்னை—ஞாயிறு, டிசம்பர் 15, 1946. [ விலை. அணா. 2

## மிஷின் கலப்பைகளும் ரசாயன உரங்களும்

ஐனாப் ஜாபீர் அலீர் என்பவர் 194; நவம்பர் மாதம் வெளியான "கிராம இந்தியா" என்னும் பத்திரிகையில் கீழ்க்கண்ட சுவை மிகுந்த கட்டுரை ஒன்று எழுதியிருக்கிறார் :—

"இந்தியாவில் ஆயிரக் கணக்கான வருஷங்களாக மரக் கலப்பையையும் சாண உரத்தையும் உபயோகித்து வருகிறோம். இதுவரை அவை அனுபவத்தில் பயனுடையனவாகவே இருந்து வந்திருக்கின்றன. இப்பொழுது விஞ்ஞானியும் தொழிற்சாலை முதலாளியும் இரும்புக் கலப்பையையும் ரசாயன உரங்களையும் மெஷின் கலப்பையையும் கொண்டு வந்து நம்மை மயக்குகிறார்கள்.

இரும்புக் கலப்பை எட்டங்குல ஆழம் உழுகிறது. அதனால் உரமில்லாத அடிமண் உரமுள்ள மேல் மண்ணோடு கலந்து அதை வளக்குறைவாக ஆக்கி விடுகிறது. இந்த நஷ்டத்தைப் போக்குவதற்காக ரசாயன உரங்களை உபயோகிக்கச் சொல்லுகிறார்கள். ஆனால் நஷ்டமுண்டாவது இயற்கை உரம், சாண உரம் போன்றவைகள் உபயோகித்தால் தான் அந்த நஷ்டம் போகும் இப்பொழுது சாண உரம் கிடைப்பது அரிதாயிருக்கிறபடியால் நிலங்கள் வளம் குறைந்து வருகின்றன. இந்த மாதிரிதான் அமெரிக்காவிலும் ஏற்பட்டிருக்கிறது.

மெஷின் கலப்பை 14" ஆழம் உழுகிறது. அதனால் அதிகமான உரம் தேவைப்படுகிறது.

இந்தியாவில் மெஷின் கலப்பையிடமும் ரசாயன உரங்களிடமும் மோகம் உண்டாகி வருகிறது. அவைதான் சிறந்த விவசாய சின்னங்களாக கருதப் படுகின்றன. ஆனால் அது அபாயகரமானதாகும்.

மெஷின் கலப்பை சீக்கிரமாக வேலை செய்துவிடும் என்பதும் ரசாயன உரங்களால் உடனேயே நல்ல மாசூலை கண்டு விடலாமென்பதும் உண்மைதான். ஆனால் இது வெறும் பிரமையேயாகும். மெஷின் கலப்பை உபயோகித்தாலும் உபயோகியாவிட்டாலும் ஒரு விஷயம் நிச்சயம். அது யாதெனில் நிலம் வளங்குறைந்து போகாமலிருப்பதற்காக மிருக உரமும் தாவர உரமும் அதிகமான அளவு உபயோகிக்க வேண்டியது இன்றியமையாதது.

கக்கூஸ் மலத்தை உரமாக்கும் முறை அனுஷ்டிக்கப் பட்டு வருகிறது. ஆனால் ஜனங்கள் அதை போதுமான அளவு அறிந்து கொள்ளவுமில்லை போதுமான அளவு கையாளவுமில்லை. தேசிய சர்க்கார் விவசாயிகளுக்கு கொடுக்கக் கூடிய சிறந்த உதவி இந்த மாதிரி தயாராக்கும் உரத்தை கொடுப்பதும் பிரசாரம் செய்வதுமே யாகும். இப்பொழுது செடி கொடிகளும் மிருகங்களின் உருப்புக்களும் புண்ணாக்குகளும் மரத்துண்டுகளும் ஏராளமாக வீணாய் கொண்டு வருகின்றன. அத்துடன் அசௌகரியப் படுத்தி வருவதாகவும் சொல்லலாம். இந்த நல்ல பொருள்களை எல்லாம் உரமாகச் செய்து உரமாக்க வேண்டும். முனிசிபாலிடிகள் கக்கூஸ் மலத்தையும் சாக்கடை ஜலத்தையும் உரமாகச் செய்ய வேண்டும். பெரிய நகரங்களில் ஏராளமான கறவை மாடுகள் உள. அவைகளின் சாணத்தை உரமாக்க வேண்டும். அப்படிச் செய்தால் அதிகமான உணவை உண்டாக்குவதோடு அதிகமான போஷணை உள்ள உணவுகளை உண்டாக்குகிறவர்களும் ஆவோம்.

அப்படியானால் இப்பொழுது ஏற்படுத்தி இருக்கும் ரசாயன உரத் தொழிற்சாலைகளை என்ன செய்வது என்று கேட்கலாம். ரசாயன உரம் வேண்டாம் என்று நான் சொல்லவில்லை. ஆனால் அதிகமாகவும் தொடர்ந்தும் உபயோகித்தால் நிலங்களுக்குக் கேடு உண்டாகும் என்றே சொல்கின்றேன். ஏதேனும் திடீரென்று ஏற்படும் சந்தர்ப்பங்களில் மட்டும் அவைகளை உபயோகிக்கலாமேயன்றி தினந்தோறும் செடிகளுக்கு உணவாக உபயோகிக்கக் கூடாது

சர் ஆல்பர்ட் ஹோவார்ட் என்னும் விவசாய நிபுணர் கூறுவதாவது ;—

"பயிர்களுக்கு நோய் உண்டாவதைப் போல விவசாயிகளுக்கு வேறு எதுவும் அதிகமான கவலையை உண்டாக்குவதில்லை. இந்த விஷயத்தை சாதாரண ஜனங்கள் இன்னும் போதுமான அளவு அறிந்து கொள்ளவில்லை. இப்பொழுது பயிர்களுக்கு ஏற்பட்டுவரும் நோய்களெல்லாம் சென்ற 45 வருஷங்களாகத் தான் தோன்றி இருக்கின்றன. ரசாயன உரங்களும் இந்த 45 வருஷங்களாகத் தான் உபயோகப்பட்டு வருகின்றன. லிபிக் என்பவர் மண்ணின் ரசாயன குணங்கள் இவை என்று கண்டு பிடித்தார். அதன் பயனாகத்தான் ரசாயன உரங்கள் தயாரிக்கப்பட ஆரம்பித்தன. அத்துடன் மெஷின் கலப்பை வந்ததும் விவசாயிக்கு ரசாயன உரங்கள் இல்லாமல் பயிர் செய்ய முடியவில்லை."

நிலத்தை ஆழமாக உழுவதும் ரசாயன உரங்களை அதிகமாக உபயோகிப்பதும் சேர்ந்து நிலத்தின் வளத்தை நிர்மூலமாக்கி வருவது உலகத்தில் காணப் படும் அனுபவமாகும். வளம் குறைவதற்கு மூலாதாரமான காரணம் சாணம் முதலிய ஜீவ உரம் இல்லாததேயாகும். நாம் மேனாட்டைப் பின்பற்றி நடக்கும் தருவாயில் இருக்கிறோம். மேனாட்டு விவசாயிகள் விழுந்த குழியில் நாமும் விழுந்துவிடக் கூடாது. நம்மிடம் ஜீவ உரம் இல்லை என்று சொல்லவும் முடியாது. அதைச் சரியாக உபயோகிக்க வேண்டியது தான் நமது கடமை. சர்க்கார் புண்ணாக்கு எலும்பு, ரத்தம் முதலிய ஜீவ வஸ்துக்கள் அயல் நாடுகளுக்கு அனுப்பக் கூடாது. உள்நாட்டில் ஜீவ உரங்களை உண்டாக்க வேண்டும், இவற்றை அவர்கள் செய்வார்கள் என்று நம்புகிறேன்.

வி. ஜி. டி.

## அதிகார ஆசையும் மதமும்

எந்த மதத்தையேனும் அனுஷ்டிப்பவர்களுக்கு உத்ஸாகம் அளவுகடந்து விடுமானால் அவர்கள் இராஜாங்கத்தை தம் வசப்படுத்த முயலுவார்கள். அதன் மூலம் தம் வாதத்தைப் பரப்புவதற்கு ஆசைப்படுவார்கள். அதற்காக மனிதத்தன்மை யற்ற அநாகரிகமான அக்கிரமங்களைச் செய்ய உட்படுவார்கள். ஆதிகாலத்தில் அரசாங்கத்தில் அரசனே பிரதானமானவனாய் இருந்தான். அதனால் ஒரு மதத்தை பரப்புவதற்கு கையாளக்கூடிய சௌகரியமான வழி அவனை அந்த மதத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்வதும், அந்த மதமே ராஜாங்க மதம் என்று அவனைக் கொண்டு பறைசாற்றுவதுமே யாகும். அப்படி பறைசாற்றும் மதத்தை ஏற்றுக்கொள்ளுகிறவர்களுக்கு விசேஷ நன்மைகளும் ஏற்றுக்கொள்ளாதவர்களுக்கு அதிகமான வரி, சிறைவாசம், அங்கத்தைத் துண்டித்தல், சித்திரவதை, சொத்து பறிமுதல், தேசபிரஷ்டம், பலவந்த மதமாற்றம், முதலிய சாத்தான் தன்மையுள்ள தண்டனைகள் அளித்து வந்தார்கள் சில தேசங்களில் தீக்கொளுத்துவதின் மூலமாகவும் வாளுக்கு இரையாக்குவதின் மூலமாகவும் மதத்தை பரப்பி வந்தார்கள்.

புத்தருடைய சிஷ்யர்களில் ஒருவனான தேவதத்தன் என்பவன் அவரிடம் பகைமைகொண்டு வேறு ஒரு மதம் உண்டாக்க முடிவு செய்தான். அதற்காக மகத அரசருடைய குமாரர்களில் ஒருவனாகிய அஜாதசத்துருவை தன் வசப்படுத்திக் கொண்டான். வயதான அரசரை சிறையிலிட்டுவிட்டு சிம்மாசனம் ஏறுமாறு யோசனை கூறினான். அதன்பிறகு அஜாத சத்துருவின் உதவியைக்கொண்டு புத்தரைக் கொல்லவும் அவருடைய சிஷ்யர்களைத் துன்புறுத்தவும் முயற்சிகள் செய்தான்.

பிரகலாதனுடைய சரித்திரமானது ஒரு தனி மனிதனுடைய சரித்திரம் போல் தரப்பட்டிருக்கிறது. ஆனால் அதன் தாத்பரியம் அதுவன்று. மதவெறி கொண்ட ஒரு அரசன் பிறமதத்தைச் சேர்ந்தவர்களை எப்படி எல்லாம் துன்புறுத்த எண்ணுவான் என்பதைக் காட்டுவதற்காகவே ஆன்றோர்கள் அந்தக் கதையை சிருஷ்டி செய்திருக்கிறார்கள். உலகத்திலுள்ள ஒவ்வொரு மதத்தின் சரித்திரத்தை உற்று நோக்கினால் இம்மாதிரியே நடந்துவந்திருக்கும் விஷயம் எல்லோருக்கும் விளங்கும். இந்தியாவில் வைதிகர்கள, பௌத்தர்கள், சைவர்கள், சீக்கியர்கள், போன்றவர்கள் எல்லோரும் இந்தவிதமான துன்பத்துக்கு ஆளாகி இருக்கிறார்கள். அது மட்டுமன்று. இவர்களும் அதிகாரம் கிடைத்தஉடன் இந்த விதமாகவே பிற மதஸ்தர்களை நடத்தி வந்திருக்கிறார்கள். மேனாட்டில் கிருஸ்தவர்களுக்கும் முஸ்லிம்களுக்கும் இடையில் நடந்த மதச் சண்டைகளும் கிருஸ்தவர்கள் யூதர்களுக்குச் செய்த அட்டூழியங்களும் உலகப் பிரசித்தியானவை. சோவியத் ரஷ்யாவில் கிருஸ்தவ மதத்தை ஒழித்துவிடுவதற்காக செய்யப்படும் முயற்சியும் இது போன்றதே யாகும்.

சைனாவிலும் ஜப்பானிலும் இதே மாதிரி காரியங்கள் நடைபெற்றிருக்கின்றன.

எங்கே அரசாங்கமானது எல்லா மதஸ்தர்களையும் ஒன்றுபோல் எண்ணுகின்றதோ, அங்கேதான் சகல மதஸ்தர்களும் சண்டை சச்சரவின்றி சமாதானமாக வாழ்ந்து வந்திருக்கிறார்கள். இந்தியாவில் வெகு காலமாக இந்த மாதிரி மதவெறி கஷ்டங்கள் அனுபவத்தின் காரணமாகச் சகிப்புத் தன்மை உண்டாகி இருக்கிறது. ஹிந்து மதமென்பதில் சைவம், வைஷ்ணவம், புத்தம், ஜைனம், வேதாந்தம், சித்தாந்தம் பல அடங்கி இருக்கின்றன. அவைகளிடையே காணப்படும் சகிப்புத் தன்மை ஒன்றை வைத்துத்தான் அவைகள் எல்லாவற்றையும் ஹிந்து மதம் என்று கூறுகிறோம். கிருஸ்து பிறப்பதற்கு முன்னதாகவே இந்தியருக்கு இந்த உண்மை புலப்பட்டுவிட்டது. ஆனால் பல நூற்றாண்டுகளுக்கு பின்புதான் அது அவர்களுடைய மனதில் வேரூன்ற ஆரம்பித்தது. இஸ்லாம் மதம் இந்தியாவில் காலெடுத்து வைத்த சமயத்தில் இந்த சகிப்புத்தன்மையின் வேர் ஆழமாக ஊன்றிவிட்டது என்று சொல்லலாம் உலக பிரசித்தியான அசோகர் இந்த உண்மையை நன்றாக உணர்ந்திருந்தார். அவரைப்பற்றி பண்டித ஜவஹர்லால் நேரு "இந்தியாவைக் கண்டுகொண்டேன்" என்ற தமது நூலில் கீழ்கண்டவாறு கூறுகிறார்:—

"அசோகருடைய தூதர்கள் அவருடைய ஆசிமொழிகளையும் புத்தருடைய ஹிதோபதேசத்தையும் சிரமேல் தாங்கிக்கொண்டு. சிரியா, எகிப்து, மாசிடோனியா சிரீன், எபிரஸ் போன்ற நாடுகளுக்குச் சென்றார்கள் அவர்கள். மத்திய ஆசியாவுக்கும் பர்மாவுக்கும், சயாமுக்கும் போனார்கள். அசோகர் தம்முடைய மகனையும் மகளையும் தெற்கேயுள்ள இலங்கைத் தீவுக்கு அனுப்பினார். இந்தத் தூதர்கள் தங்கள் மதத்தை அறிவுக்குப் புலப்படும்படி செய்ய முயன்றார்களே யன்றி பலவந்தமாக தம்முடைய மதத்திற்கு யாரையும் சேர்த்துவிட முயலவில்லை. அசோகர் பௌத்த மதத்தில் அளவற்ற பக்தி யுடையவர். ஆயினும் எல்லா மதங்களையும் பாரபக்ஷமின்றி மரியாதையாகவே நடத்தினார்."

'எல்லா மதங்களும் ஏதேனும் ஒரு காரணத்திற்காக வெறும் மரியாதை செய்யத் தகுந்தனவே யாகும். ஆதலால் எவன் பிற மதங்களிடம் சகிப்புத் தன்மையோடு நடந்துகொள்கிறானோ அவன் தன்னுடைய மதத்தை உயர்த்திக் கொள்வதோடு மற்ற மதஸ்தர்களுக்கு நன்மை செய்கின்றவனும் ஆகின்றான் என்று' அசோகர் தம்முடைய சிலா சாசனம் ஒன்றில் எழுதி இருக்கிறார்.

இந்தியாவுக்கு முதல் முதலாக வந்த முஸ்லிம்கள் அனுபவத்தைவிட மத பக்தியையே அதிகமாக உடையவர்களாக இருந்தார்கள். அரசாங்கத்தின் மூலம் தங்கள் மதத்தை பரப்பும் ஆசை அவர்களுக்கும் அதிகமாயிருந்தது. ஆனால் கொஞ்ச நாள் ஆனதும் அவர்கள் இந்தப் பிழையைக் கண்டு கொண்டார்கள். ஆனால் இந்த உண்மையைப் பரிபூரணமாக ஆட்சி முறையில் அனுஷ்டிக்க ஆரம்பிப்பதற்கு முன் தங்களுடைய அரசியல் அதிகாரத்தை இழந்து ஆங்கிலேயருக்கு அடிமையாகி விட்டார்கள். அதனால்தான் அரசாங்கத்தை மதத்தைக் கொண்டு பரவச் செய்யவேண்டும் என்ற ஆசை இன்னும் அவர்களை விட்டு நீங்காமல் இருக்கிறது. தனியாக ஒரு முஸ்லிம் ராஜ்யத்தை இந்தியாவில் உண்டாக்க வேண்டுமென்றும் அப்பொழுது தான் மதமும் பண்பாடும் உயர்ந்தோங்கும் என்றும் எண்ணுகிறார்கள். இந்த ஆசை முஸ்லிம் லீக் தலைவர்களுடைய மனத்தை ஆட்கொண்டிருக்கிறது. அதே மாதிரியான ஆசை ஹிந்து மதத்தைச் சேர்ந்த அரசியல் வாதிகளில் சிலருடைய மனத்திலும் உதித்திருக்கின்றது. இந்த விதமாக அதிகார ஆசையானது மத விஷயங்களில் மறுபடியும் தலை காட்ட ஆரம்பித்திருக்கின்றது. வங்காளத்தில் முஸ்லிம் லீகுக்கு ஓரளவு அதிகாரம் கிடைத்திருக்கின்றது. ஆனால் அதைப் பலப் படுத்து வதற்கு முன்பாகவே மதத்தை ஆதாரமாகக் கொண்ட அரசாங்க மானது எவ்வளவு தீமைகளைச் செய்ய முடியு மென்பதை இப்பொழுது அது நிதர்சனமாகக் காட்டியிருக்கிறது. வங்காளத்தில் முஸ்லிம்கள் அட்டூழியங்கள் செய்த படியால் நாங்கள் பீஹாரிலும் மற்ற மாகாணங்களிலும் அட்டூழியங்கள் செய்தோம் என்று ஹிந்துக்கள் சமாதானங் கூறித் தப்பித்துக் கொள்ள முடியாது.

அன்பும் இரக்கமும் இரட்டைக் குழந்தைகள்—டிரைடன்

அதிகார ஆசை சமய விஷயங்களில் புகுந்து விடுமானால் எவ்வளவு தீமைகளை உண்டாக்குமென்பதை அவர்கள் அனுபவத்தில் கண்டறிந்தவர்கள். ஒரு அரசாங்கம் தன்னுடைய மதத்தைப் பரப்புவதற்காக அட்டூழியம் செய்யுமானால் அவற்றிற்குப் பழி வாங்குவதற்கான பிற ஒரு அரசாங்கத்தை உண்டு பண்ணுவதால் பிரச்சினை தீர்ந்து விடமாட்டாது. முஸ்லிம் மதத்தைக் காப்பாற்றுவதற்காக பாகிஸ்தான் வேண்டுமென்று முஸ்லிம்கள் கூறினால் ஹிந்து மதத்தைக் காப்பாற்றுவதற்காக ஹிந்துஸ்தானம் வேண்டுமென்று கேட்பதால் எவ்வித பயனும் உண்டாகாது. இந்த இரண்டு மதங்களும் சீக்கிய மதமும் கிருஸ்தவ மதமும் பார்ஸி மதமும் முதலிய மற்ற மதங்களுடன் சேர்ந்து எல்லோருக்கும் பொதுவான ஒரு மதத்தையும் பண் பாட்டையும் உண்டாக்குவதற்கான வழிகளைக் கண்டு பிடிக்க வேண்டும்.

கே. ஜி. எம்.

## குதிரைப் பந்தயம்

சூதாட வேண்டுமென்ற ஆசை மனித சுபாவத்தில் ஆழமாக வேரூன்றியுள்ள ஒரு விஷயமாகும். வேத காலத்தில் கூட சூதாட்டக் காரர்கள் இருந்திருக்கிறார்கள்.

"சூதாட வேண்டாம். நிலத்தைப் பயிரிடுங்கள்" என்று கவாஷா ஐலுஷா என்னும் ரிஷி சூதாட்டக் காரர்களைப் பார்த்துக் கூறியதாக ரிக் வேதத்தில் சொல்லப்பட்டிருக்கிறது.

மகா பாரத காலத்தில் க்ஷத்திரியர்கள் சூதாடும் வழக்கமுடையவர்களாயிருந்தார்கள். சண்டையிடும்படி அழைத்தால் அதை ஏற்றுக் கொள்வதே க்ஷத்திரிய தர்மம் என்று அவர்கள் எண்ணியதுபோலவே சூதாட அழைத்தால் அதை ஏற்றுக் கொள்வதும் க்ஷத்திரிய தர்மம், என்று எண்ணக் கூடிய அளவு முட்டாள்களாக இருந்தார்கள்.

ஆனால் பிற்காலத்தில் இந்த வழக்கம் குறைந்து வந்தது. ஆதலால் பிரிட்டிஷார் இங்கே வருவதற்கு முன் நம்முடைய தேசத்தில் மதுபானமும் சூதாட்டமும் இப்பொழுது உள்ளது போல் பிரமாதமான பிரச்னைகளாக இருக்கவில்லை.

பிரிட்டிஷார் இந்தியாவுக்கு வரும் பொழுதே குதிரைப் பந்தயங்களையும், பங்கு விற்பனையையும் கொண்டு வந்து சேர்த்து விட்டார்கள். பந்தயம் வைப்பது அதிகமாக கண்ணுக்குப் புலப்படாதிருப்பதால் அதன் தீமைகளைப் பற்றி நாம் ஒன்றும் சொல்ல முடியாமலிருக்கிறோம். ஆனால் ஹியூ மார்டின் போன்ற பிரிட்டிஷ் ஆசிரியர்கள், "பந்தயம் வைப்பது மித மிஞ்சி குடிப்பதை விடக் கூட சமூகத்திற்கு அதிகமான தீமையைச் செய்யக் கூடியது என்று கூறுகிறார்கள். இந்த வழக்கத்தால் ஏற்படும் தீமைகள் எண்ணிறந்தன. மனோ தைரிய மில்லாதவர்கள் இந்த வழக்கத்தில் எளிதாக ஈடுபட்டு விடுகிறார்கள். ஆதலால் எந்தச் சிறு விஷயத்திலும் கூட பந்தயம் வைப்பது என்பது ஆகவே ஆகாது. என்று திருமார்டின் வற்புறுத்துகிறார். அவர் மேலும் கூறுவதாவது:-

பரிபூர்ண மதுவிலக்கு வேண்டுமென்று கூறும் வாதங்கள் அனைத்தும் பந்தயம் வைப்பதற்கும் பொருந்தும். கிருஸ்தவ கோவில்கள் பண வசூல் செய்வதற்காக லாட்டரி நடத்தும் வழக்கத்தை கொஞ்சம் கூட ஆதரிக்கக் கூடாது. லாட்டரி வழக்கம் ஏற்படுவதால் நல்ல காரியத்திற்கு மனமுவந்து பணம் கொடுப்பது என்ற நல்ல வழக்கம் அழிந்து போய் விடுகின்றது. சாதாரணமாக இரண்டு பேர்க்கிடையில் நடக்கும் எந்த நியாயமான விவகாரத்திலும் இரண்டு பேருக்கும் நன்மையுண்டாகும். ஆனால் பந்தயம் வைப்பதில் ஒருவருக்கு லாபமும் ஒருவருக்கு நஷ்டமும் உண்டாகிறது."

திருமார்டின் கூறியதிலுள்ள இறுதி வாக்யம் பந்தயம் வைப்பதின் தீமை எதுவென்பதை நன்றாக விளக்குகின்றது. பந்தயம் வைப்பதற்கும் திருடுவதற்கும் வித்தியாசமில்லை. ஒரே ஒரு வித்தியாசம் தான் உண்டு. பந்தயம் வைப்பதில் இழந்து போகிறவர் இழந்து போனால் பணத்தைத் தருவதாக ஏற்றுக் கொண்டே பந்தயம் வைக்கிறார். பிறரிடம் நன்கொடை வாங்கவும் எதையேனும் கொடுத்து பிரதி பிரயோசனம் பெறவும் மட்டுமே நமக்கு உரிமையுண்டு. ஆனால் பந்தயம் வைப்பதில் அந்த இரண்டும் கிடையாது. எதுவும் கொடாமல் அடைவதே பந்தயத்தின் சாரம். ஒருவர் நஷ்டமடைய ஒருவர் லாபம் அடைவதே அதன் பொருள்.

அதுபோலவே விளையாட்டுகளிலானாலும் சரி பங்குகள் வாங்கி விற்பதில் ஆனாலும் சரி சூதாட்டமானது ஒரு பொழுதும் விரும்பத் தக்கதல்ல. அவைகள் சமூகத்திற்கு கேடு உண்டாக்குகின்றன என்பதில் சந்தேகமில்லை.

திருமார்டின் கூறுகிறார்:—"சூதாட்ட வழக்கம் வேரூன்றுமானால் போதை வஸ்துக்கள் சாப்பிடுவதால் எவ்வளவு தீமை உண்டாகிறதோ அவ்வளவு தீமையை விளைவிக்கும். அதில் அடங்காத ஆசை உண்டாகிவிடும். நல்லது கெட்டது என்ற உணர்ச்சியை அறவே ஒழித்து விடும்."

திருமார்டினுடைய முடிவு யாதெனில் பந்தயம் வைப்பது தன்னுடைய நன்மைக்கானாலும் சரி பிறருடைய நன்மைக்கானாலும் சரி கிருஸ்தவர்கள் தங்களுடைய பணத்தை செலவழிக்கக் கூடிய வழிகளில் பந்தயம் வைப்பது என்பது ஆகாது.

கிருஸ்தவர்கள் பந்தயம் வைப்பதை தங்களுக்கு தீயதென்று அனுபவம் என்னும் ஆசிரியருடைய பாடசாலையில் கற்றுக் கொள்வார்களேயானால் அது ஹிந்துக்களுக்கும் முஸ்லிம்களுக்கும் தீயதேயாகும். ஹிந்துக்கள் மேற்கூறிய வேத வாக்கியத்தை அனுசரித்து நடக்க கடமைப் பட்டவர்கள் ஆவார்கள் முஸல்மான்கள் குரான் வேதப்படி நடக்க வேண்டியவர்கள் ஆவார்கள்.

குர்ஆன் மதுபானத்தை எவ்வளவு அதிகமாக கண்டிக்கிறதோ அவ்வளவு அதிகமாக சூதாட்டத்தையும் கண்டிக்கிறது ஆகவே அது கூறுவதாவது:— "மதுபானத்தைப் பற்றியும் சூதாட்டத்தைப் பற்றியும் கேட்கிறார்கள் இரண்டும் பெரிய பாபங்கள் என்று கூறுகிறேன். மதுபானமும் சூதாட்டமும் சாத்தானுடைய சிருஷ்டிகள். சாத்தான் மதுபானத்தையும் சூதாட்டத்தையும் கொண்டு மக்களிடையே துவேஷத்தையும் பகைமையையும் உண்டாக்க முயலுகிறான். அப்படிச் செய்து அல்லாவையும் அவருடைய வழிபாட்டையும் மறந்து விடும்படி செய்கிறான்."

பொருளாதார விஷயத்தில் ஊறிப்போயிருக்கும் ஜே. எம். கெய்ன்ஸ் என்பவர் கூட மதுபானத்தை ஒழிப்பது போலவே குதிரைப் பந்தய சூதாட்டத்தையும் ஒழிக்க வேண்டுமென்று யோசனை கூறுகிறார்.

நம்முடைய மந்திரிகள் கெய்ம்ஸ்னுடைய யோசனையை ஏற்றுக் கொள்வது நல்லது. ஆங்கில நாட்டில் கால் பந்து விளையாட்டில் கூட சூதாட்டம் அனுசரிக்கப்பட்டு வருகிறது. அந்தத் தீய வழக்கம் நம்முடைய நாட்டிலும் தலை காட்ட ஆரம்பித்திருக்கிறது. பத்திரிகைகள விளம்பரம் செய்கின்றன. இதை முளையிலேயே மந்திரிகள் கிள்ளிவிட வேண்டும்.

வி. ஜி. டி.

# தமிழ் ஹரிஜன்

டிசம்பர் 15 ஞாயிறு 1946


## இந்த முடிவு ஏன்?

காந்தியடிகள் கிழக்கு வங்காளத்தில் தனியாக ஒரு கிராமத்தில் போய் வசிக்கிறாரல்லவா? அப்படி முடிவு செய்ததின் காரணத்தையும் அதற்குமுன் அவர் தம் சகாக்களுடன் நடத்திய விவாதத்தையும் குறித்து பியாரேலால் கீழ்கண்டவாறு எழுதுகிறார்:—

நவம்பர் 20-ம் தேதி புதன் கிழமை அதிகாலையில் மகாத்மா காந்தியடிகள் தம்முடைய சகாக்களிடம் கீழ்க்கண்டவாறு கூறினார்:—

"நீங்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாகப் பிரிந்து கிராமங்களில் வசிக்க வேண்டும். நீங்கள் வசிக்கும் கிராமத்திலுள்ள ஹிந்துக்களின் பாதுகாவலுக்கு நீங்களே பொறுப்பாளியாக இருக்க வேண்டும். அவசிய மேற்படில் உயிரைக் கொடுத்தேனும் பாதுகாக்கத் தயாராயிருக்க வேண்டும். ஆனால் நான் சொல்லுவதற்காக நீங்கள் அப்படிச் செய்ய வேண்டியதில்லை. இப்படி நடக்க பிரியமில்லாதவர்கள் இங்கிருந்து போய் வேறு நிர்மாணக் காரியங்களில் ஈடுபடலாம் முஸ்லிம்களிடமும் இஸ்லாத்திடமும் மனசில் துவேஷ உணர்ச்சி உள்ளவர்களும் இதுவரை நடந்த காரியங்களைக் குறித்து மனத்திலுண்டான கோபத்தை அடக்க முடியாதிருப்பவர்களும். நான் சொல்லுகிற மாதிரி செய்ய முடியாது. அப்படிச் செய்யப் புறப்பட்டால் எனக்கு இழிவு தேடுகிறவர்களே ஆவார்கள். நான் முடிவு செய்து விட்டேன். அதைமாற்ற முடியாது ஹிந்துக்களும் முஸ்லிம்களும் ஒற்றுமையாக வாழ கற்றுக் கொள்ளும் வரை நான் கிழக்கு வங்காளத்திலேயே இருந்துவிடத் தீர்மானித்திருக்கிறேன். நான் தனியாக வசித்துக் கொள்வேன். நான் வசிக்கும் கிராமத்திலுள்ள ஜனங்களின் உதவியைக் கொண்டு சமாளித்துக்கொள்வேன்.'

அன்று மாலை அவர் தம்முடைய அபிப்பிராயத்தை மறுபடியும் விளக்கிச் சொன்னார். விவாதம் நடைபெற்றது. அதில் தக்கர் பாபாவும், திருமதி சுசேதா கிருபளானியும் கலந்து கொண்டார்கள். அப்பொழுது காந்தியடிகள் கூறியதாவது:—

"இந்த விதமாக நான் நடக்காவிட்டால் என்னுடைய அஹிம்சை குறைபாடு உடையதாயிருக்கும் வாழ்வின் மர்மம் அஹிம்சைதான். பதஞ்சலியோக சூத்திரத்தில் அஹிம்சையைப் பற்றி கூறி இருக்கும் விஷயம் தவறு என்றும் அதைத்திருத்த வேண்டியது அவசியமென்றும் அஹிம்சையே பரம தர்மம் என்பதை ஹிம்சையே பரம தர்மம் என்று மாற்றியமைக்கவேண்டுமென்றும் ஒரு நண்பர் என்னிடம் சொல்வது வழக்கம், அவர் கூற்று தவறு. ஆனால் எனக்கு என்றைக்கேனும் அஹிம்ஸா தர்மத்தில் நம்பிக்கை இல்லாமல் போகுமானால் அப்பொழுது நான் அந்த நண்பருடைய திருத்தத்தை ஏற்றுக்கொள்ள வேண்டியதுதான்.

வங்காளத்திலுள்ள பெண்களை வங்காளிகள் அறிந்திருப்பதைவிட நான் அதிகமாக அறிவேன். இன்று அவர்கள் திக்கற்றவர்களாய் தெருவில் நிற்கிறார்கள் நானும் என்னுடைய தோழர்களும் பிராணத்தியாகம் செய்தால் அது அவர்களுக்கு சுயமரியாதையுடன் இறக்கக்கூடிய வித்தையைகற்றுக் கொடுக்கவாவது செய்யும் அத்துடன் அது அக்கிரமிகளுடைய கண்களைத்திறக்கவும் மனத்தை இளக்கவும் செய்யலாம். என்கண்கள் மூடின நிமிஷமே அவர்கள் கண்கள் திறக்குமென்று நான் சொல்லவில்லை. ஆனால் அதுதான் இறுதியாக ஏற்படக்கூடிய பயன் என்பதில் எனக்கு லவலேசமும் சந்தேகமில்லை. அஹிம்சை அழியுமானால் ஹிந்து தர்மமும் அழிந்து போகும்.'

எங்களில் ஒருவர் கூறினார்:—

"இப்பொழுதுள்ள பிரச்சினை மத சம்மந்தமானதன்று அரசியல் சம்பந்தமானது. முஸ்லிம்கள் நடத்தும் இயக்கம் ஹிந்துக்களுக்கு விரோதமாக அன்று காங்கிரஸுக்கு விரோதமாகவேயாகும்.

காந்தியடிகள்:— "அவர்கள் காங்கிரஸை ஹிந்து ஸ்தாபனமாகவே கருதுகிறார்கள் என்பதை நீங்கள் காணவில்லையா அத்துடன் மதம், அரசியல் பொருளாதாரம் என்று நான் வாழ்வை ஒன்றுக் கொன்று சம்பந்தமில்லாத விதத்தில் திருத்தி வைப்பதில்லை. என்பதும் உங்களுக்குத் தெரியாதா? வீணாக வார்த்தைகளைப் பெருக்கி அந்த காட்டுக்குள் அகப்பட்டுக் கொள்ள வேண்டாம். இப்பொழுது ஏற்பட்டுள்ள சிக்கலான நிலைமையை ஹிம்சை மூலமாகவோ அஹிம்சை மூலமாகவோ எந்த விதத்தில் சீர்திருத்தலாம் என்பதே இப்பொழுதுள்ள பிரச்னை. அதாவது என்னுடைய அஹிம்ஸா முறை இங்குள்ள நிலைமையில் பயன்படுமா பயன்படாதா என்பதே கேள்வி."

மற்றொருவர்:—உங்கள் ரத்தத்திற்காக தவித்துக் கொண்டிருக்கும் ஜனங்களுக்கு எப்படி அறிவு உண்டாக்க முடியும். சில தினங்களுக்கு முன்பு தானே நமது ஊழியர்களில் ஒருவரை கொலை செய்து விட்டார்கள்.

காந்தியடிகள்:—அது எனக்குத் தெரியும். ஆனால் இவ்வளவு பெரிய அக்கிரமங்களை அடக்குவது தான் நம்முடைய வேலையாகும்.

மற்றொரு நண்பர்:—இப்பொழுது உள்ள நிலைமை அதிக அபாயகரமானதாக இருக்கிறதே அப்படி இருக்க ஜனங்களை தங்கள் கிராமங்களுக்குத் திரும்பிச் செல்லும்படி சொல்லுவது சரியாகுமா?

காந்தியடிகள்:—கிராமத்திலுள்ள முஸ்லிம்கள் எல்லோரும் சேர்ந்து ஹிந்துக்களைப் பாதுகாப்பதாக உறுதி கூற வேண்டும். அத்துடன் ஒரு நல்ல ஹிந்துவும ஒரு நல்ல முஸ்லிமும் உயிரைக் கொடுத்தேனும் பாதுகாக்க தயாராக இருப்பதாக உறுதிகூற வேண்டும். அப்படியானால் கிராமங்களுக்குத் திரும்பிப் போகும்படி சொல்வதில் தவறு ஒன்றுமில்லை. அவ்வளவு உறுதி கூறினால் போதும் ஹிந்துக்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப் போய்விட வேண்டும். அபாயமேற்பட்டால் அதை எதிர்த்து நிற்க வேண்டும். இந்த விதமாக நடந்து கொள்ள மனோதைரியமில்லாவிட்டால் ஹிந்து மதம் கிழக்கு வங்காளத்திலிருந்து ஒழிந்துவிட வேண்டியதுதான். கிழக்கு வங்காள விஷயம் வங்காள மாகாணத்தை மட்டும் பொருத்ததன்று. இன்று இந்தியாவின் யுத்தம் கிழக்கு வங்காளத்திலேயே வெற்றி பெற வேண்டியதா யிருக்கிறது. ஹிந்து மதமானது ஆபாஸமானது என்றும் ஆதலால் ஹிந்துக்களை பலாத்காரமாக முஸ்லிம்களாக ஆக்குவது புண்ணிய கைங்கரியமென்று இன்று சிலர் முஸ்லிம்களுக்குப் போதித்துக் கொண்டு வருகிறார்கள். பலாத்காரமாக முஸ்லிம்கள் ஆக்கப்பட்டவர்களுடைய சந்ததியார்களாவது முஸ்லிம் மதத்துக்கு மிஞ்சுமென்று அவர்கள் எண்ணுகிறார்கள். பழி வாங்குவதை தர்மமாகக் கொண்டால் முஸ்லிம்கள் செய்துள்ள அட்டூழியங்களை எல்லாம் ஹிந்துக்களும் செய்ய வேண்டியதே யாகும். நேசதேசத்தார் ஹிட்லருடைய அட்டூழியங்களை ஒழிக்கப் புறப்பட்டார்கள். ஆனால் இறுதியில் ஹிட்லரைவிட பெரிய ஹிட்லராக ஆகி இருக்கிறார்கள்.

**கண்டிக்க அறியாதவன் கருணை காட்ட முடியாது—கார்லைல்**

காந்தி அடிகளிடம் கடைசியாக கேட்கப்பட்ட கேள்வி :—

"இன்னும் அக்கிரமிகள் கிராமங்களில் திரிந்து கொண்டிருக்கும் பொழுது எப்படி ஜனங்களுக்கு தைரியம் ஊட்ட முடியும்? அதற்கு காந்தியடிகள் கூறிய பதிலாவது :—

அதனால் தான் ஒரு நல்ல ஹிந்துவுடன் ஒரு நல்ல முஸ்லிமும் திரும்பி வருவோர்க்கு பாதுகாவலாக நிற்கும் பொறுப்பை ஏற்றுக் கொள்வதாக உறுதி மொழி கொடுக்க வேண்டுமென்று வற்புறுத்துகிறேன். வங்காள அரசாங்கத்தை நடத்திவரும் முஸ்லிம் லீகர்கள்தான் நல்ல முஸ்லிம்களை தர வேண்டியவர்கள் ஆவார்கள்.

காந்தியடிகள் தத்தபாராவிலிருந்து நண்பர் ஒருவருக்கு எழுதிய கடிதத்தில் கீழ்க் கண்டவாறு கூறுகிறார் :—

"இங்கே நான் ஈடுபட்டிருக்கும் விஷயம் தான் என்னுடைய வாழ்வில் நான் கடைசியாகச் செய்யக்கூடிய காரியமாக இருக்கலாம். நான் இங்கிருந்து உயிரோடு வாகை சூடி ஊருக்கு திரும்புவேனானால் நான் மறுபிறப்பு பெற்றவனாவேன். இதற்குமுன் எந்தக் காலத்திலும் சோதிக்கப்படாத அளவு என்னுடைய அஹிம்ஸை இங்கே பரிபூர்ணமாக சோதிக்பட்டு வருகிறது.

## பிராணத்தியாகம்

ஒரு காலத்தில் போதி சத்வர் ஒரு யானையாக பிறந்தார். நன்றாக வளர்ந்தபின் யானைகளுக்கெல்லாம் அரசனாக வேண்டியிருக்க அதை விட்டுவிட்டு தம்முடைய தோழர்களைத் துறந்து தண்ணீர் இல்லாத பாலைவனத்தால் சூழப்பட்ட தூரத்திலுள்ள ஒரு காட்டுக்குப் போய் விட்டார். அங்கே இலைகளையும் கனிகளையும் தாமரைத் தண்டுகளையும் உண்டு குளத்தில் ஜலம் அருந்தி மகிழ்ந்தார். துறவியைப் போல் வாழ்ந்து கொண்டிருந்தார். ஒரு நாள் அவர் காட்டின் ஓரத்தில் திரிந்து கொண்டிருந்த பொழுது ஜனங்கள் அழுது புலம்பும் சப்தமானது அவருடைய காதுக்கு எட்டிற்று. உடனே சப்தம் வந்த திசையை நோக்கி விரைவாக ஓடி காட்டிற்கு வெளியே சென்றார். கொஞ்ச தூரத்தில் நூற்றுக் கணக்கான மக்கள் பசியாலும் தாகத்தாலும் களைப்பாலும் வருந்திப் புலம்பிக் கொண்டிருப்பதைக் கண்டார். அவர்கள் அவ்வளவு பிரம்மாண்டமான யானையைக் கண்டு பயமடைந்த போதிலும் களைப்பின் மிகுதியால் தப்பியோட சக்தி இல்லாதவர்களாயிருந்தார்கள். அப்பொழுது யானையானது அவர்களை நோக்கி அசைந்து அசைந்து மெதுவாக நடந்து போயிற்று.

"பயப்படாதீர்கள், ஐயன்மீர் நீங்கள் யார் இந்த துக்க கரமான நிலைமையை எப்படி அடைந்தீர்கள் என்று" போதி சத்துவராகிய அந்தப் பெரிய யானை மனிதக் குரலில் கேட்டது. நட்புக் கடையாளமாக தும்பிக்கையை ஆட்டிற்று. இதைக் கண்டதும் அந்த மனிதர்களுக்குத் தைரியம் உண்டாகிவிட்டது. எல்லோரும் எழுந்து நின்று அதற்கு வணக்கம் செய்தார்கள். முதியவர்களில் ஒருவர் "யானைகளுக்கரசே எங்களை அரசன் கோபித்து இந்தப் பாலைவனத்திற்குத் துரத்தி விட்டான் இப்பொழுது தங்களுடைய மங்களகரமானதரிசனத்தால் நாங்கள் எங்களுடைய கஷ்டமாகிய பாலைவனத்தை கடந்து விட்டதாகக் கருதுகிறோம்" என்று சொன்னார்.

யானை :—நீங்கள் எத்தனைபேர் இருக்கிறீர்கள்.

முதியவர் :—அரசன் எங்களை நாட்டை விட்டுத் துரத்தும் பொழுது நாங்கள் ஐநூறு பேராக இருந்தோம் ஆனால் பசியும் தாகமும் தாங்கமாட்டாமல் பலர் இறந்து விட்டார்கள்.

இதைக் கேட்டதும் அந்த மகாத்மாவுக்கு அளவு கடந்த கருணை உண்டாகிவிட்டது.

"ஐயோ இந்த அரசர்கள் தங்கள் நன்மையைக்கூட அறிய முடியாத அளவு குருடர்களாக இருக்கிறார்களே. குடிகளைக் கஷ்டப்படுத்தும் கொடுமையாகிய தீ தங்களை அழித்துவிடும் என்பதை அறியாமலிருக்கிறார்களே ஐயோ இது என்ன மடமை" என்று கூறி வருந்தினார்.

அதன்பின் அவர் இந்த தம்முடைய விருந்தாளிகளை எப்படி உபசரிக்கலாம் என்பதைப்பற்றி சிந்திக்கலானார். அப்பொழுது அந்த மனிதர்கள் கூப்பிய கைகளுடனும் நீர் நிறைந்த கண்களுடனும் அவரைப் பார்த்து. "பெரியவரே, இந்தப் பயங்கரமான பாலைவனத்திலிருந்து தப்புவதற்கான வழியை எங்களுக்கு காட்டியருளும். அல்லது உயிர்தரக் கூடிய ஜலமுடைய ஓடையையாவது தடாகத்தையாவது காட்டியருள வேண்டும்" என்று வேண்டிக்கொண்டார்கள்.

அதன்பின் யானையானது தன்னுடைய தும்பிக்கையைத் தூக்கி வடதிசையை நோக்கி ஆட்டிக் கொண்டு கூறியது :—

"அதோ தெரியும் செங்குத்தான மலையின் அடிவாரத்தில் சுத்த ஜலமுடைய தடாகம் ஒன்று இருக்கிறது. அங்கே போய் நீங்கள் உங்கள் தாகத்தைத் தீர்த்துக்கொண்டு சிறிது காலம் ஓய்வு கொள்ளுங்கள். அதன்பின் நடந்து சென்றால் சிறிது தூரம் சென்றதும் அங்கே ஒரு யானையின் உடல் விழுந்து கிடப்பதைக் காண்பீர்கள். அந்த யானை இன்றுதான் மலையில் இருந்து விழுந்து இறந்து விட்டது. அதன் மாமிசத்தை நீங்கள் உணவாக உண்ணுங்கள். அதன் குடல் பைகளில் தடாகத்திலிருந்து ஜலத்தை நிறைத்து வைத்துக்கொள்ளுங்கள். இந்த மாதிரி செய்து கொண்டால் இந்தக் காட்டை நீங்கள் எளிதாகக் கடந்து விடுவீர்கள்."

இந்தவிதமாகச் சொல்லிவிட்டு அந்த யானை அவர்கள் கண்ணுக்குத் தெரியாமல ஓடிவிட்டது. அதன்பின் அது மலையின் உச்சியில் ஏறி அங்கிருந்து கீழே குதித்து உயிர் துறந்தது.

அந்த மனிதர்கள் யானையின் யோசனைப்படியே நடந்து மலை அடிவாரத்திலுள்ள தடாகத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே தண்ணீர் குடித்து இளைப்பாறிவிட்டு மறுபடியும் நடக்க ஆரம்பித்தார்கள். சிறிது தூரம் சென்றதும் ஒரு யானையின் உடலைக் கண்டார்கள். உடனே அவர்கள் "நாம் கண்ட யானைஅரசனைப் போலவே இருக்கின்றது இந்த யானை. நம்முடைய நண்பர் நம்மை காப்பாற்றுவதற்காக இந்த மலையிலிருந்து குதித்துவிட்டார்" என்று எண்ணித் துக்கமும் சந்தோஷமும் நன்றியறிதலும் ஒருங்கே யடைந்தார்கள்.

(இத்தக் கதை ஆர். ஸி. டிரெவிலியன் எழுதியுள்ள விண்பால்ஸ் என்னும் புஸ்தகத்திலிருந்து எடுக்கப்பட்டதாகும்.)

வி. ஜீ. டி.

## ஜாதி மதச் சின்னங்கள்

ஒரு நிருபர் எழுதுகிறார் :—

"ஜனங்கள் என்னை எப்பொழுதும் சரஸ்வதி வகுப்பைச் சேர்ந்த பிராமணனாகவும் சைவ மதத்தைச் சேர்ந்த ஹிந்து வாகவுமே கருதுகிறார்கள். நான் உத்தியோகஸ்தர்கள் முன் சென்றாலும் பத்திரங்களில் என்னைப் பற்றி எழுத வேண்டி இருந்தாலும் என்னுடைய ஜாதி என்ன மத மென்ன என்று

சாவைக்கண்டு பயப்படாதீர்கள், அதுதான் உயிர்களுக்கு சிறந்த நண்பன்—ராஜாஜி

கேட்கிறுர்கள். எனக்கு பிராமணன் என்று அழைப்பதில் கொஞ்சமும் பிரியமில்லே. அது போலவே சைவனென்று சொல்லிக் கொள்ளவும் பிரியமில்லே. எந்த மதத்திலும் சேராத கடவுள் பக்தன் என்று சொல்லிக் கொள்ளவே விரும்புகிறேன். சமூகத்தார் எனக்கு அளித்திருக்கும் இந்த ஜாதி மதச் சின்னங்களை நீக்கிக் கொள்ளுவதெப்படி ?"

உத்தியோகஸ்தர்கள் முன்னிலேயிலும் பத்திரங்கள் எழுதும் பொழுதும் இந்த நிருபர் எனக்கு ஜாதி இல்லே நான் கடவுள் பக்தன் என்று சொன்னுல் போதும். இந்த விதமாக சர்க்காரும் சட்டம் செய்யலாம் என்று எண்ணுகிறேன்.

ஆனுல் ஜாதியும் மதமும் இல்லே என்று வாயால் சொன்னுல் மட்டும் போதாது. காரியத்திலும் செய்து காட்ட வேண்டும். இந்த நிருபருக்கு அவருடைய ஜாதிக்கு வெளியே உறவினர்கள் இருக்கிறுர்களா ? இல்லே என்றுல் அவருடைய ஜாதியார் கூட அவருக்கு ஜாதி இல்லே என்பதை ஒப்புக் கொள்ள மாட்டார்கள்.

உத்தியோகஸ்தர்கள் முன்னிலேயிலும் பத்திரங்களிலும் ஜாதியையும் மதத்தையும் குறிப்பிடுவதற்குக் காரணம் ஒவ்வொரு ஜாதியாருக்கும் விவாக ரத்து வாரீசு முதலிய விஷயங்களில் வேறு, வேறு வழக்கங்கள் இருப்பதே தான். ஆதலால் இவர் ஜாதி மதச் சின்னங்கள் வேண்டா மென்றுலோ இவருடைய உறவினர்கள் அவைகளே விட்டுவிட மாட்டார்கள். சீர்திருத்த வாதிகளான சட்ட சபை மெம்பர்கள் இது விஷயத்தில் தக்க சட்டம் இயற்ற முயற்சி செய்வார்கள் என்று நம்புகிறேன்.

வா. பி., — 5-12-46 கே. ஜி. எம்.

## பலாத்கார மதமாற்றம்

காந்தியடிகள் சந்துபூர் என்னும் ஊருக்குச் சென்றதும் கிழக்கு வங்காளத்தில் நடந்த சம்பவங்களேப் பற்றி அங்குள்ள முஸ்லிம்களிடம் நேரில் கேட்டு விஷயங்களேத் தெரிந்து கொள்ள வேண்டு மென்று விரும்பினுர். அவர் சந்துபூருக்கு 'கிவி' என்னும் தோணியில் சென்றதும் திபரா ஜில்லாவில் முஸ்லிம் லீகைச் சேர்ந்த பிரபலஸ்தர்களில் பலர் அவரைப் பேட்டி கண்டார்கள்.

அவர்களில் ஒருவர் கூறினுர் :—

சந்துபூர் சப் டிவிஷனில் எந்த விதமான குழப்பங்களும் நடைபெறவில்லே. பத்திரிகையில் பொய்யாகச் செய்த பிரசாரத்தினுல் உண்டான பய பீதியின் காரணமாகத்தான் அகதிகள் சந்துபூரை நோக்கி ஓடி வந்தார்கள். முஸ்லிம்கள் பதினேந்து ஹிந்துக்களேத்தான் கொன்றுர்கள். இராணுவத்தில் ஹிந்துக்களே பெரும்பாலோர். இராணுவம் சுட்டதனுல் இரண்டு மடங்கு முஸ்லிமகள் இறந்து போயிருக்கிறுர்கள்.

சட்ட சபை மெம்பரான மற்றொருவ நண்பர் கூறியது :—

இப்பொழுது ஹிந்துக்கள் தங்கள் ஊரை விட்டு வெளியேற வேண்டிய அவசிய மில்லே. அப்படியிருந்தும் இன்னும் அவர்கள் வெளியேறிக் கொண்டிருக்கிறுர்கள். அதற்குக் காரண மென்ன ? அவர்கள் தங்கள் ஊர்களுக்குத் திரும்பிப் போகவே விரும்புகிறுர்கள். ஆனுல் அவர்கள் வெளியேறிப் போனுல் தான் முஸ்லிம் லீக் அரசாங்கத்துக்கு இழிவுண்டாகும், அதன் நிர்வாகத்தை ஸ்தம்பிக்கச் செய்து விடலாம் என்று எண்ணி ஹிந்து ஊழியர்கள் ஊருக்குத் திரும்பவொட்டாமல் தடுத்துக்கொண்டிருக்கிறுர்கள்.

அந்தச்சமயம் பிரதம மந்திரி ஷம்சுதீன் சாயபும் வேறு இரண்டு மந்திரிகள் நசுருல்லா சாயபும், அப்துல் ரஷீத் சாயபும் பிரசன்னமாயிருந்தார்கள். பேட்டிகாணவந்த இருவர் கூறியதைக் கேட்டதும் பிரதம மந்திரி கூறியதாவது;—

" சந்துபூர் சப் டிவிஷனேப் பிரித்துப் பேசுவதில் பயனில்லே அந்த ஜில்லாவில் மற்ற இடங்களில் நடந்தவற்றையும் நாம் கவனிக்க வேண்டியது, அவசியமல்லவா? இராணுவம் சுட்ட விஷயமும் சந்தர்பத்துக்குப் பொருத்தமான விஷயமன்று. அவர்கள் பேசி முடிந்த பின் காந்தியடிகள் கூறியபதிலாவது:—

நீங்கள் கூறுவதை ஏற்றுக் கொண்டால் முஸ்லிம்கள் எந்த விதமான அக்கிரமங்களும் செய்யவில்லே என்றே ஏற்படும். போலீசும் ராணுவமும் முஸ்லிம்களே துன்பப்படுத்திக் கொண்டிருந்தார்கள் என்றும் அதனுல் முஸ்லிம்களும் பய பீதியை உண்டாக்குவதைத் தொழிலாகக் கொண்ட ஹிந்துக்களும் சேர்ந்தே அக்கிரமங்கள் செய்தாரகள் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். இந்த மாத்திரை மிகவும் பெரியது. யாரும் விழுங்க முடியாது. குழப்பங்கள் ஏற்படாதிருந்தால் ஏன் இராணுவத்தை வரவழைக்க வேண்டும். இன்னும் காலேயில் 25-ஹிந்துக்கள் வந்து என்னேப் பேட்டி கண்டார்கள். திபராவிலும், நோவாகாளியிலும் நடந்த பயங்கரமான அட்டூழியங்களேப் பற்றி என்னிடம் சொன்னுர்கள். நான் வங்காளத்தில் கால் வைத்தது முதல் இந்த விதமான விஷயங்கள் என் காதுக்கு வந்து எட்டிக் கொண்டே இருக்கின்றன. முஸ்லிம்லீகைச் சேர்ந்த வரும் கூட அட்டூழியங்கள் நடந்ததை ஒப்புக்கொள்ளவே செய்கிறுர்கள். இறந்தவர்கள் தொகையைத் தான் ஒப்புக்கொள்ளவில்லே எத்தனே பேர் இறந்தார்கள் என்பதைப் பற்றி எனக்குக் கவலே இல்லே. யாரேனும் ஒருவர் கடத்திச் செல்லப்பட்டாலும். ஒருவர் மதமாற்றம் செய்யப்பட்டாலும் ஒருவர் விவாகம் செய்யப்பட்டாலும் அது கடவுளுக்கு பயந்து நடக்கும் ஒவ்வொரு ஆணும் பெண்ணும் தலேயைத் தொங்கப்போடக் கூடிய அளவு நாணம் தரும் செயலாகும்.

நான் எதையும் ஒளித்துவைத்துப் பேச விரும்பவில்லே எனக்கு வரும் தகவல்களே எல்லாம் மந்திரிகளிடம் சமர்ப்பிப்பேன். நான் ஹிந்துக்களிடையிலும், முஸ்லிம்களிடையிலும் நம்பிக்கையும் நல்லெண்ணமும் உண்டாக்குவதற்காகவே வந்திருக்கிறேன். இந்த விஷயத்தில் உங்கள் உதவியை நாடுகின்றேன். போலீஸ் உதவியைக் கொண்டும் இராணுவத்தின் உதவியைக் கொண்டும் சமாதானத்தை நிலே நாட்ட நான் விரும்ப வில்லே. பலவந்தமாக ஏற்படுத்தும் சமாதானம் சமாதானமாகாது. கிழக்கு வங்காளத்திலிருந்து வெளியே ஓடி விடுவதையும் நான் ஆதரிக்கவில்லே முஸ்லிம்லீக் மந்திரிசபையைத் தூற்றுவதற்காக ஜனங்கள் திரும்பிப் போவதை தடுப்பதாயிருந்தால் அது தடுப்பவர்களுக்கே கேடாய் வந்து முடியும். ஆனுல் அதை என்னுல் நம்ப முடியவில்லே நீங்கள் பிறரைக்குறை கூறுவதைவிட குற்றத்தை ஒப்புக் கொள்வதே சரியான மார்க்க மென்று உங்களுக்கு யோசனே கூறுவேன். கடவுள் தீமை செய்பவனே ஒரு நாளும் தண்டியாமல் விடமாட்டார். "

அப்பொழுது முதலில் பேசிய கனவான் " ஆம் சில இடங்களில் தீ வைத்ததும் கொள்ளேயடித்ததும் நடக்கத்தான் செய்தன. ஆனுல் ஜனங்கள் வீட்டைவிட்டு ஓடிய பிறகே கொள்ளேயடித்தார்கள். வீடுகள் திறந்து கிடந்தமையால் கொள்ளே யடிக்க வேணுமென்ற ஆசை அக்கிரமிகளுக்கு உண்டானதில் ஆச்சரியமொன்றில்லே.

அதற்கு காந்தியடிகள் கீழ்கண்டவாறு பதில் கூறினுர்:—

ஏன் ஜனங்கள் தங்கள் வீடுகளே விட்டு பிழைத்தோம் பிழைத்தோம் என்று ஓடவேண்டும். சாதா

ரணமான காலங்களில் ஜனங்கள் அப்படிச் செய்வதில்லை வீடு திறந்து கிடந்து, பாதுகாவல் இல்லாமல் இருந்தால் கொள்ளை யடிக்கப்படும் என்று எல்லோருக்கும் தெரியும். யாரேனும் முஸ்லிம் லீகை தூற்ற வேண்டும் என்பதற்காக மட்டும் தங்கள் வீடுகளை இப்படித் திறந்து போட்டுவிட்டு ஓடுவார்களா? ''

பேட்டி காண வந்தவர்களில் மற்றொருவர் கூறியதாவது :—'' ஜனத்தொகையில் ஒரே ஒரு பகுதியாரே அட்டூழியங்களில் இறங்கி இருக்கிறார்கள். மற்றவர்கள் எல்லோரும் உண்மையாகவே நல்ல ஜனங்கள் அவர்கள் எந்த விதத்திலும் இந்த அட்டூழியங்களுக்கு பொறுப்பாளிகள் அல்லர்.''

அதற்கு காந்தியடிகள் பதில் :—இந்த விஷயத்தை ஆராய் வதற்கான சரியான மார்க்கம் இதுவன்று. 99 சதமான ஜனங்கள் நல்லவர்கள் என்றும் நடந்த விஷயங்களை மனப்பூர்வமாக வெறுக்கிறார்களென்றும் கூறுவது உண்மையானால் ஒரு சதமானமானவர்கள் அக்கிரமம் ஒன்று கூட செய்திருக்க முடியாது. அவர்கள் இதற்குள் கைதியாகியுமிருப்பார்கள். நல்லவர்கள் வெறுக்கிறோமென்று சொன்னால் போதாது காரியத்தில் நடத்திக் காட்ட வேண்டும். எதுவும் முடிவு செய்யாமல் இருப்பது நல்லதன்று. ஹிந்துக்கள் இருக்கக்கூடாது என்று முஸ்லிம்கள் எண்ணினால் உடனே அவர்கள் அதைப் பகிரங்கமாகக் கூறிவிட வேண்டும். ஆனால் உங்களுடைய கருத்து அதுவன்று. பாகிஸ்தானிலுள்ள சிறு பான்மையோருக்கு பரிபூர்ணமாக நீதி வழங்கப் படுமென்று காய்தே ஆசாம் கூறியிருக்கிறார். அந்த நீதி இப்பொழுது எங்கே? பாகிஸ்தானில் நடக்கக் கூடியதற்கு இது ஒரு அறிகுறியோ வென்று ஹிந்துக்கள் இன்று என்னிடம் கேட்டார்கள். நான் இஸ்லாம் மதத்தைப் படித்திருக்கிறேன். ஏன் நீர் ஹிந்து மதத்தை மறந்துவிட்டு கலாமா ஓதக் கூடாது என்று நான் தென்னாப்பிரிகாவிலிருந்த பொழுது அங்குள்ள முஸ்லிம் நண்பர்கள் என்னிடம் கேட்பதுண்டு. நான் சந்தோஷமாக கலாமாவை ஓதத் தயாரா யிருக்கிறேன் ஆனால் ஹிந்து மதத்தை மட்டும் ஒரு நாளும் மறக்க மாட்டேன் என்று நான் அவர்களிடம் பதில் சொல்வது வழக்கம். நான் மகமது நபிகளிடம் கொண்டிருக்கும் அன்பும் மரியாதையும் நீங்கள் கொண்டிருப்பதை விடக் குறைந்ததல்ல. ஆனால் பலாத்காரமாக மதமாற்றம் செய்வது மதத்தைக் கெடுக்குமே யன்றி முன்னேறும்படி செய்யாது.''

பிரதம மந்திரி ஷம்சுதீன் சாயபு கூறியதாவது :—'' மதத்தில் நிர்பந்தம் என்பதற்கு இடமே கிடையாது என்று எங்கள் குர்ரான் வேதம் போதிப்பது உண்மைதான். முஸ்லிம்கள் பாகிஸ்தான் பெற விரும்பினால் சிறு பான்மையோருக்கு நீதி வழங்கி அவருடைய நம்பிக்கையைப் பெற வேண்டுமென்று நான் முஸ்லிம் லீக்களிடம் கூறி இருக்கிறேன். நீங்கள் செய்த அட்டூழியங்களால் பாகிஸ்தானைக் கொன்று விட்டீர்கள் என்றும் அவர்களிடம் சொன்னேன்.

அதன்பின் காந்தியடிகள் தொடர்ந்து பேசியதாவது :—" சமீபத்தில் நடந்த மத மாற்றங்களை எல்லாம் பலாத்காரத்தால் ஏற்பட்ட மதமாற்றமென்றே கருதுவேன். அப்படி மதமாறியவர்கள் முஸ்லிம்கள் ஆக மாட்டார்கள். ஹிந்துக்கள் தான் என்று நோவாகாளி ஜில்லா மாஜிஸ்ரேட் திரு மெக்கார்னே ஒரு துண்டு பிரசுரம் வெளியிட்டிருக்கிறார்கள்.

இந்தமாதிரியாக முஸ்லிம்கள் எல்லோருமே சொல்வார்களானால் இப்பொழுது ஏற்பட்டிருக்கும் நிலைமை அதிகமாக சீர்திருந்தி விடும். கலாமா ஓத வேண்டு மென்ற ஆசை யாருக்கேனும் உண்மையாகவே உண்டாகுமானால் அது பகிரங்கமாக காட்டிக் கொள்ள வேண்டு மென்ற அவசியதும் ஏது? மனமானது மத மாற்றத்தை விரும்புமானால் அதற்கு கடவுளைத் தவிர வேறு சாட்சி யாரும் அவசியமில்லை. மனிதத் தன்மை யில்லாத அக்கிரமங்களைச் செய்து கொண்டே கலாமாவையும் ஓதினால் அது இஸ்லாம் மதம் ஆகாது, இஸ்லாம் மதத்தைக் கேவலப்படுத்துவதே ஆகும். "ப்ளி மத" சகோதரர்கள் என்ற கிறிஸ்தவ சங்கத்தார் என்னை கிறிஸ்தவ மதத்தில் சேர்ந்து கொள்ளும்படி அழைத்தது எனக்கு ஞாபகம் வருகிறது. தம்மை ரக்ஷகராக ஏற்றுக் கொள்ளுபவர்களுடைய பாவங்களை எல்லாம் ஏசு கிறிஸ்து மன்னித்து விமோசனம் அளிப்பார் என்றும், ஆதலால் நான் கிறிஸ்தவன் ஆகி விட்டால் என்னிஷ்டம் போல் எதுவும் செய்யலாம் என்றும் அவர்கள் சொன்னார்கள். ஆனால் கிறிஸ்தவ வேத நூலாகிய பைபிளிலுள்ள புதிய ஏற்பாட்டில் காணப்படும் கீழ்க் கண்ட மொழிகள் இவர்கள் கூறுவது தவறென்று சந்தேகமற காட்டுகின்றன :—

'' வாயால் மட்டும் என்னைக் கடவுளே கடவுளே என்று கூறுகிறவர்கள் என்னிடம் ஒருநாளும் வந்து சேரமாட்டார்கள்.''

ஆதலால் பலாத்காரமாக கலாமா ஓதும்படி செய்துவிட்டால் முஸ்லீம் அல்லாதவரை முஸ்லீம் ஆக்கி விடலாம் என்று எண்ணுவது தவறென்று முஸ்லீம் தலைவர்கள் வெளியிட வேண்டியது அவசியமாகும். பலாத்காரயாக முஸ்லீம் ஆக்குவது இஸ்லாம் மதத்தை இழிவு படுத்துவதே யாகும்."

வந்திருந்தவர்களில் ஒருவர் அதுவரை பேசாதவர். இப்பொழுது '' இங்கே நடந்ததெல்லாம் பொய்ப் பிரசாரத்தின் பயனே '' என்று கூறினார்.

அதற்குக் காந்தியடிகள் கூறிய பதிலாவது :—' சகல பொறுப்பையும் பொய்ப் பிரசாரத்தின் தலையில் போட்டு விடலாகாது. நாம் சரியாக நடந்து கொண்டால் பொய்ப் பிரசாரம் என்ன செய்ய முடியும்?"

இறுதியில் ஒருவர் கூறினார் :—

" சமாதானத்தையும் நம்பிக்கையையும் உண்டாக்குவதற்காக நாங்கள் ஹிந்துத் தலைவர்களோடு கிராமங்களுக்குச் செல்லத் தயாரா யிருக்கிறோம். ஆனால் ஹிந்து தலைவர்கள் எங்களை நம்பாமலிருக்கிறார்கள்.''

அதற்கு காந்தியடிகள் கூறிய பதில் :—'' அதனால் பாதகமில்லை. நான் வருகிறேன் உங்களுடன். நீங்களும் நானும் ஒவ்வொரு கிராமத்துக்கும் ஒவ்வொரு வீட்டிற்கும் சென்று சமாதானத்தையும் நம்பிக்கையையும் புத்துயிர் பெறச் செய்வோம்.''

தத்தபாரா, பியாரேலால்.

## கதர் கூறும் செய்தி

ஒவ்வொரு கிராமமும் அதிலுள்ள ஒவ்வொரு வீடும் தனக்கு வேண்டிய உணவு உடை மற்றும் கிராமத்தில் உற்பத்தி செய்யக்கூடிய பொருள்கள் விஷயத்தில் பிறரை எதிர்பாராமல் வாழ முடியுமானால் சமூகமானது தன்னம்பிககை யுடையதாகவும் சுதந்திரமுடையதாகவும் ஆகிவிடும். பிறரை எதிர்பாராமல் வாழவேண்டு மென்று கூறுவதைக்கொண்டு பரஸ்பரம் ஒத்துழைக்க வேண்டிய அவசியமில்லை என்று என்று கூறுவதாக எண்ணக்கூடாது. போட்டி ஒழிய வேண்டுமென்றும் அதற்குப் பதிலாக ஒத்துழைப்பு உண்டாக வேண்டுமென்றும் கூறுவேன். அப்படி ஏற்பட்டால் சமூகத்தில் உண்மையான சமத்வம் உண்டாகும். அத்தகைய சமூகமே அஹிம்ஸா முறையை கையாளும் சமூகமாகும்.

ஆதிகாலத்தில் அத்தகைய அஹிம்ஸா பூர்வமான சமூகத்தை அமைப்பது முடியாத காரியமா யிருக்கலாம்.

ஆனால் மனித ஜாதி வளர்ச்சி அடைந்து விட்டபடியால் இப்பொழுது அது அஹிம்ஸையை மேற்கொள்ள வேண்டியதே யாகும். அறிவும் விஞ்ஞானமும் முன்னேறி இருப்பதால் சமூகமானது விழிப்படைந்திருக்கிறது. ஆகையால் அஹிம்ஸையே வாழ்வின் மர்மம் என்பதையும் அதுதான் மனித சாதிக்கு உண்மையான பாதுகாவல் என்பதையும் உணர்ந்து கொள்ள வேண்டும். அனுபவந்தான் சிறந்த ஆசிரியர். அனுபவத்தின் காரணமாக உண்டாகும் அஹிம்ஸா உணர்ச்சிதான் அசையாமல் நீடித்து நிற்கக் கூடியதாகும். மனித ஜாதி சென்ற ஐயாயிர வருஷகாலத்தில் எத்தனையோ விதமான துன்பங்களை அனுபவித்தாகிவிட்டது. அப்படி இருந்தும் அது இன்னும் அஹிம்ஸா தர்மத்தை மேற்கொள்ளாதிருக்குமானால் மனித ஜாதி நிச்சயம் அழிந்து போகும் என்பதில் சந்தேகமில்லை.

அஹிம்ஸையை அனுஷ்டிக்கக்கூடிய சமூகத்தை வெறும் பிரசாரத்தால் மட்டும் ஏற்படுத்திவிட முடியாது. அதற்கு ஒழுக்கமான வாழ்வும் மனித வாழ்வின் உண்மையான லட்சியம் இது என்னும் அறிவும் அதை தேடுவதற்கான ஸ்தாபனமும் தேவையாகும். இப்பொழுது உலகத்தில் காணப்படும் அரசாங்க முறைகள் அஹிம்ஸையை அனுஷ்டிக்கக் கூடிய சமூகத்தை உண்டாக்குவதற்கு ஏற்றவையல்ல. அவைகள் மனித சுபாவத்தில் காணப்படும் உயர்ந்த அம்சங்களை விட்டுவிட்டு சுயநலம், பேராசை, பயம், கர்வம் போன்ற இழிவான குணங்களையே தங்களுக்கு ஆதாரமாக வைத்துக்கொண்டு நடந்து வருகின்றன. இதற்கு அனுகூலமாகவே தண்டனை வெகுமதி என்னும் இரண்டு சாதனைகளையும் கையாண்டு வருகின்றன, இத்தகைய அரசாங்க முறையின் கீழ் வாழ்வது மனிதனை இழிவாக்கிக் கொண்டு வருகிறது. அது வேறு விதமாகச் செய்ய முடியாது நம்முடைய வாழ்வு இயற்கைக்கு விரோதமாக ஆகிவிட்டது. அத்துடன் நம்முடைய லட்சியங்களும் இயற்கைக்கு விரோதமாக ஆகிவிட்டன. சமூகமானது நோயுற்றிருக்கின்றது.

சொறி சிரங்கால் கஷ்டப்படுகிறவர்களுக்கு உடம்பைச் சொறிந்தால் சுகமாயிருக்கும். அதைக் கொண்டு உடம்பை சொறியவேண்டுமென்ற ஆசை சரியான ஆசை என்று சொல்ல முடியாது. அது போலவே தற்காலத்திலுள்ள நாகரிகமானது நம்முடைய சுகானுபவ ஆசைகளை பூர்த்திசெய்து வைப்பதைக்கொண்டு அந்த நாகரிகம் விரும்பத்தக்கது என்று கூறமுடியாது. எவனுடைய மனத்தில் காம இச்சை நிறைந்திருக்கிறதோ அவனிடம் எவ்வளவு நல்ல நியாயங்கள் எடுத்துக் கூறினாலும் பிரயோசனப் படாது. எட்வோட் கார்பெண்டர் என்னும் ஆங்கிலப் பேறிஞர் "நம்முடைய நாகரிகமாகிய நோயும் அதன் பரிகாரமும்" என்ற பெயருடன் ஒரு சிறந்த நூல் எழுதி இருக்கிறார். அதனால் சமூகத்தில் எவ்விதமான மாறுபாடும் ஏற்படவில்லை. சமூகமானது முன்போலவேதான் நடந்துகொண்டிருக்கிறது. 25 வருஷ காலத்துக்குள் இரண்டு உலக யுத்தங்கள் நடந்து மனித ஜாதியை அழியும் நிலைமைக்கு கொண்டு வந்திருக்கின்றன. இன்று இந்தியா தேசம் ஆன்ம அபிவிருத்தியைப் புறக்கணித்து வந்தபோதிலும் ஆன்ம அபிவிருத்திதான் இந்தியாவின் பிதிரார்ஜித சொத்தாகும். இந்தியா மறுபடியும் ஆன்ம அபிவிருத்தியை ஏற்றுக்கொண்டு பிறருக்கும் வழிகாட்ட வேண்டும் அதற்காகத்தான் காந்தியடிகள் இந்தியாவிலுள்ள கிராமங்கள் தங்களுக்கு வேண்டியவற்றை தாங்களே உற்பத்தி செய்து கொள்ள வேண்டுமென்ற லட்சியத்துக்காகப் பாடுபட்டு வருகிறார்.

இப்பொழுது உலகத்தில் விஞ்ஞானம் வெகுதூரம் முன்னேறி இருக்கிறது. போக்குவரத்து சாதனங்கள் பெருகி இருக்கின்றன, பொருளாதாரத் துறையில் நாடுகள் பலவாறு பின்னிக்கிடக்கின்றன. அப்படி இருந்தும். எங்கு பார்த்தாலும் உணவுப் பஞ்சமும் உடை பஞ்சமே காணப்படுகின்றன. இத்தகைய கேவலமான நிலைமையை உண்டாக்கி இருக்கும் சமூக முறையை உடனே திருத்தியாக வேண்டும். அஹிம்ஸா தத்துவத்தை ஏற்றுக் கொண்டால் தான் அந்தக்காரியத்தை செய்ய முடியும். தன்கையே தனக்கு உதவி என்பது தான் பொருளாதாரத் துறையில் அஹிம்ஸையை அனுஷ்டிக்கும் முறையாகும் அந்த அஹிம்ஸா பொருளாதார தத்துவத்தின் சிறந்த சின்னம்தான் கதர்.

காகாகலேல்கார்.

## மதுவிலக்கு மணி மொழிகள்

(1) பிராமணனைக் கொல்பவனும் மதுவைக் குடிப்பவனும் விமோசன மடைய மாட்டார்கள்.

—வேதம்.

(2) கோர்டில் விசாரிக்கப்படும் வழக்குகளில் 95 சதமானம் மதுபானத்தின் காரணமாக உண்டானவை அல்ல என்று கூறுவது சரியல்ல. நான் நீண்டகாலம் ஜட்ஜாக இருந்திருக்கின்றேன் 99 சதமானம் மதுபானத்தால் ஏற்படுபவை என்று உறுதியாகக் கூறுவேன்.

—பிராம்டன் பிரபு.

(3) ஐரோப்பாவில் உள்ள ஜனங்கள் அகால மரணமடைவதற்கும் அதிகமாக நோயுறு வதற்கும் பிரதானமான காரணங்கள் பெண் வியாதியும் மதுபானமே யாகும்.

—ரேலங்காஸ்டர்.

(4) விபசாரம் செய்ய வேண்டுமென்று ஆசையுண்டா வதற்குறிய முக்கியமான காரணங்களில் ஒன்று மதுபான மாகும்.

—பெண் வியாதியை தடுக்கும் சங்கம்.

(5) பிரபாஸா என்னுமிடத்தில் யாதவர்கள் எல்லோரும் மது அருந்தினார்கள். வெறி ஏற்பட்டு சண்டை செய்து அழிந்து போனார்கள், பலராமனும் கிருஷ்ணனும் இதைப் பார்த்துக் கொண்டிருந்தார்கள். அவர்களால் அதைத் தடுக்க முடியவில்லை.

—தேவி பாசபதம்.

(6) மதுபானமே சண்டையை விட அதிகமாக ஜனங்களைக் கொல்கின்றது அது மட்டுமன்று வெகு கேவலமான முறையிலேயே கொல்கின்றது.

—மெர்ஸியர் பாதிரியர்.

(7) மதுபானக் கடைகள் விபசாரத்துக்காக பெண்களை வைத்தும் பணம் தேடுகின்றன.

—வட அமெரிக்க மதுவிலக்கு மாசிகை

(8) மதுபான வழக்கத்தை நாட்டிலிருந்து துரத்திவிட்டால் விவாகரத்து கோர்ட்டுகளுக்கு வருஷத்தில் அதிகமான காலத்துக்கு வேலை இராது.

—கோரல் பிரபு

---

## தமிழ் ஹரிஜன் சந்தா விபரம்

| | |
|---|---|
| வருஷ சந்தா | ரூ. 7 0 0 |
| ஆறு மாத சந்தா | ரூ. 3 8 0 |

**தமிழ் ஹரிஜன்**
தியாகராய நகர் :: சென்னை.

அச்சடித்தவர் பி. அருணாசலம், கமர்ஷியல் பிரின்டிங் அன் பப்ளிஷிங் ஹவுஸ், 48, அரண்மனைக்காரத் தெரு, ஜி. டி., சென்னை.
பிரசுரித்தவர் : சின்ன அண்ணாமலை, தமிழ்ப்பண்ணை, 6/2 நாகேஸ்வரராவ் ரோடு தியாகராயநகர், சென்னை 17.
ஆசிரியர்கள் : பொ. திருகூட சுந்தரம்; நாமக்கல் கவிஞர் வெ. இராமலிங்கம் பிள்ளை